**எவ்வளவு சோதனைகள் வந்தாலும், அந்த சோதனைகளையெல்லாம் மக்கள் துணைகொண்டு நாங்கள் வெற்றிபெறுவோம். ஏனென்றால், மக்களுக்கு தேவையான திட்டங்களை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.**

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி** K.**பழனிசாமி** அவர்கள்

©
தமிழ்நாடு அரசு
2019




# செய்தி மற்றும் விளம்பரம்

## மானியக் கோரிக்கை எண்.28

## அறிவிப்புகள்
## 2019–2020

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# செய்தி மற்றும் விளம்பரம்

## மானியக் கோரிக்கை எண். 28

# அறிவிப்புகள்
# 2019–2020

## கடம்பூர் ராஜு
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு
2019

**1. கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள காந்தி மண்டபம் ரூ.30.52 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள காந்தி மண்டபம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அழகுற புதுப்பித்து மேம்படுத்தப்படும். மேலும் ரூ. 52 ஆயிரம் மதிப்பீட்டில் தேவையான புதிய மரத்தளவாடங்கள் வழங்கப்படும்.

## 2. கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் ரூ.10.52 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள காமராஜர் நினைவகம் ரூ.10 இலட்சம் செலவில் அழகுற புதுப்பித்து மேம்படுத்தப்படும். மேலும் ரூ.52 ஆயிரம் மதிப்பீட்டில் தேவையான புதிய மரத்தளவாடங்கள் வழங்கப்படும்.

## 3. தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் இல்லம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் இல்லம், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பழமை மாறாமல் அழகுற மேம்படுத்தப்படும்.

**4. ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**5. கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் மணிமண்டபத்தில் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் தேவையான புத்தகங்கள் மற்றும் தளவாடங்களுடன் நூலகம் புதிதாக அமைக்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** சென்னையில் அமைந்துள்ள கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபத்தில் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் தேவையான புத்தகங்கள் மற்றும் தளவாடங்களுடன் புதிதாக நூலகம் அமைக்கப்படும்.

**6. தூத்துக்குடி மாவட்டம், கயத்தாரில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபத்தில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் தேவையான புத்தகங்கள் மற்றும் தளவாடங்களுடன் நூலகம் புதிதாக அமைக்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபத்தில், ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில், புதிதாக புத்தகங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்கப்பட்டு, நூலகம் அமைக்கப்படும்.

**7. புதுடெல்லியில் பணிபுரியும் தமிழகத்தை சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், குடும்ப உதவி நிதி, பத்திரிகையாளர் நல நிதியம் உட்பட அனைத்து நலத்திட்டங்களும் விரிவுபடுத்தி வழங்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பத்திரிகைத் துறையில், 20 ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்து, 58 வயது நிறைவடைந்து ஓய்வு பெற்ற நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பத்திரிகையாளர் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், குடும்ப உதவி நிதி மற்றும் பத்திரிகையாளர் நல நிதியம் உட்பட அனைத்து சலுகைகளும் வரைமுறைப்படுத்தப்பட்ட அதே விதிகளைப் பின்பற்றி புதுடெல்லியில் பணியாற்றும் தமிழகத்தை சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வழங்கப்படும்.

**8. தலைமைச் செயலக செய்தியாளர் அறையில் ரூ.52 ஆயிரம் மதிப்பீட்டில் இரண்டு சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** சென்னை தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறையில், செய்தியாளர் தவிர்த்த ஏனையோர் வருகையை கண்காணித்து கட்டுப்படுத்தும் வகையில் ரூ.52 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக 2 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படும்.

**9. தலைமைச் செயலக செய்தியாளர் அறைக்கு ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்பாடு செய்யப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** சென்னை தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறையில், குடிநீர் வசதி மேம்படுத்தும் வகையில், ரூ.1 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் சுத்திகரிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டு (RO Plant System) தூய்மையான குடிநீர் வழங்கப்படும்.

**10. தலைமைச் செயலக செய்தியாளர் அறைக்கு ரூ.90 ஆயிரம் மதிப்பீட்டில் சுவரில் பொருத்தும் தொலைக்காட்சி பெட்டி வழங்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** சென்னை தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறையில், செய்தியாளர்களின் பயன்பாட்டுக்கென ரூ.90 ஆயிரம் மதிப்பீட்டில் சுவரில் பொருத்தும் புதிய எல்.இ.டி. தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும்.

## 11. மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் வீடியோ ஒளிப்பதிவு கருவிகள் வழங்கப்படும்.

மாவட்டங்களில் நடைபெறும் அரசு விழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளை உடனுக்குடன் வீடியோ பதிவு செய்து, ஊடகங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்திட ஏதுவாக, **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு முதன் முறையாக வீடியோ ஒளிப்பதிவு கருவிகள் வழங்கப்படும். இதன் முதற்கட்டமாக இவ்வாண்டு, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம், தேனி, வேலூர், கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் வீடியோ ஒளிப்பதிவு கருவிகள் மற்றும் அதனை சார்ந்த உபகரணங்கள் வழங்கப்படும்.

**12. நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய 36 புகைப்படக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.1 கோடியே 1 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

செய்தி மக்கள் தொடர்புத்துறையில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் புகைப்படக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் பழமையானதாகவும், அடிக்கடி பழுது ஏற்படுவதையும் கருத்தில் கொண்டு, **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ஏற்கனவே, புதிதாக கொள்முதல் செய்து வழங்கப்பட்ட இரண்டு மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய 30 மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள், தலைமையிட புகைப்படப்பிரிவுக்கு – 5 மற்றும் தமிழரசு அலுவலகத்திற்கு – 1 என மொத்தம் 36 எண்ணிக்கையிலான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புகைப்படக்கருவிகள் மற்றும் உபகரணங்கள், ரூ.1 கோடியே 1 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பில் வழங்கப்படும்.

## 13. வீடியோ ஒளிநாடா பதிவுகளைப் பாதுகாக்க ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் எண்மிய மின்னணு ஆவண காப்பகம் (Digital Electronic Archive) உருவாக்கப்படும்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் விழாக்கள், முக்கிய பிரமுகர்களின் சந்திப்பு, அரசு வீடியோ செய்தி மலர், செய்தி தொகுப்புகள் மற்றும் சட்டப்பேரவை நிகழ்ச்சிகள் ஆகியவை பதிவேற்றி வைக்கப்பட்டிருக்கும் அந்த வீடியோ ஒளிநாடாக்களை முறையாக ஆவணப்படுத்தி, பராமரித்துப் பாதுகாக்கும் நோக்குடன் மொத்தமுள்ள 7700 எண்ணிக்கையிலான ஒளிநாடாக்களின் பதிவேற்றங்களைப் பாதுகாத்திட எண்மிய மின்னணு ஆவணக் காப்பகம் (Digital Electronic Archive) உருவாக்கப்படும்.

முதற்கட்டமாக, ரூ.1 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில், 4000 வீடியோ ஒளிநாடாக்களின் பதிவேற்றங்களை பாதுகாக்கும் வகையில், தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்து எண்மியமாக்கும் (Digitalize) பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 14. அரசுப் பொருட்காட்சியின் விளம்பர பணிக்காக ரூ.85 ஆயிரம் மதிப்பீட்டில் கணினி மற்றும் மென்பொருள் கொள்முதல் செய்யப்படும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக, மாவட்டங்களில் நடத்தப்படும் பொருட்காட்சிகளுக்கு மக்களை ஈர்க்கும் வண்ணம், அந்தந்த மாவட்டச் சிறப்புகளை உள்ளடக்கிய விளம்பரங்களை வடிவமைக்கவும் மற்றும் விளம்பரப் பணிகளை மேற்கொள்ளவும் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூ.85 ஆயிரம் மதிப்பீட்டில் நவீன கணினி மற்றும் மென்பொருள் கொள்முதல் செய்யப்பட்டு விளம்பர பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 15. தமிழரசு அச்சகத்திற்கு ரூ.25 ஆயிரம் மதிப்பீட்டில் மின்னணு எடை பார்க்கும் இயந்திரம் (Hi–Tech Electronic Weighing Machine) வழங்கப்படும்.

தமிழரசு அச்சகத்தில் அச்சுத்தாள் சுற்றி வரும் காகித உருளைகள், அலுமினியத் தட்டுகள் முதலான, அச்சுப்பணி முடிந்து கழிவு செய்யப்படும் மீள்பயன்தரத்தக்க பொருட்களை, துல்லியமாக எடையிட்டு வழங்கிட ஏதுவாக **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூ.25 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய மின்னணு எடை பார்க்கும் இயந்திரம் (Hi-Tech Electronic Weighing Machine) வழங்கப்படும்.

**16. தமிழரசு அச்சகத்திற்கு ரூ.72 ஆயிரம் மதிப்பீட்டில் வருகைப் பதிவு இயந்திரம் (Bio-Metric Reader) மற்றும் கணினி வழங்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழரசு அச்சகத்தில் பணிபுரிந்து வரும் தொழில்நுட்ப பணியாளர்களின் வருகைப் பதிவுகளை பதிவு செய்வதற்கு ஏதுவாக, ரூ.72 ஆயிரம் மதிப்பீட்டில், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய வருகைப் பதிவு இயந்திரம் (Bio-Metric Reader) மற்றும் அதனுடன் தொடர்புடைய கணினியும் வழங்கப்படும்.

**17. தமிழரசு அச்சகத்தின் சுற்றுப்பகுதியை சீர்படுத்த ரூ.29 ஆயிரம் மதிப்பீட்டில் புல் வெட்டும் இயந்திரம் (Bush Cutter) வழங்கப்படும்.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் வளருகின்ற புற்கள் மற்றும் செடிகொடிகளை அகற்றி, சுத்தம் செய்து அப்பகுதிகளை தொடர்ந்து அழகுடன் பராமரித்திட ஏதுவாக ரூ.29 ஆயிரம் மதிப்பீட்டில் புல் வெட்டும் இயந்திரம் (Bush Cutter) வழங்கப்படும்.

**கடம்பூர் ராஜூ**

செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்